# செய்யுள் - காற்றே வா

1.காற்றே வா என்னும் தலைப்பில் அமைந்த பாரதியாரின் வசனகவிதையை உம் பாடப்பகுதி கொண்டு நிறுவுக:
(அல்லது) 'காற்றின்றி அமையாது உலக உயிரியக்கம்' என்பதை பாரதியாரின் வசனகவிதை வாயிலாக நிறுவுக:

"காற்றே வா

- மகரந்தத் தூளைச் சுமந்து வா.
- இனிய வாசனையுடன் வா!
- இலைகள், நீர் அலைகளின் மீது உராய்ந்து வா.

நீ

- உயிர் நெருப்பை நீட்டித்து ஒளி தருமாறு வீசு.
- சக்தி குறைந்து அவித்து விடாதே!
- பேய் போல வீசி அழித்து விடாதே.
- மெதுவாக, நெருங்காலம் நின்று வீசிக் கொண்டிரு.
- உனக்குப் பாட்டுகள் பாடுகின்றோம்.
- புகழ்ச்சிகள் கூறுகின்றோம்.
- உன்னை வழிபடுகின்றோம்.

2.வசனகவிதை - குறிப்பெழுதுக:

- உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம்.
- இது பாரதியாரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இதன் தொடர்ச்சியே புதுக்கவிதையின் வளர்ச்சி
- ஆங்கிலத்தில் prose poetry என்பர்.

3. பாரதியார் - குறிப்பெழுதுக:
பெயர்: சுப்பிரமணிய பாரதியார்
பெற்றோர்: சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள்

பிறந்த ஊர்: எட்டயபுரம்
வேறு பெயர்கள்: மகாகவி, பாட்டுக்கொரு புலவன், நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக்குத் தந்தை.
பணி: செய்தியாளர்
பன்முகத்தன்மை: கவிஞர், எழுத்தாளர், விடுதலை வீரர், கட்டுரையாளர், இதழாளர், சிறுகதை ஆசிரியர்.
படைப்புகள்: பாஞ்சாலி சபதம், பாப்பா பாட்டு, கண்ணன் பாட்டு
காலம்: 11.12.1882 முதல் 11.9.1921 வரை
சமுதாய ஏற்றத்தாழ்வு, பெண் அடிமைக்கு எதிராகப் பாடல்கள் எழுதினார்.
இந்தியா, சுதேசமித்திரன் இதழ்களின் ஆசிரியராகவும் பணியாற்றினார்.

4. புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணம் யாது?

- ❖ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பு இலக்கணத்திற்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசன கவிதை ஆகும்.
- ❖ ஆங்கிலத்தில் prose poetry (free verse) என்றெல்லாம் அழைக்கப்படும் இப்படிவம் பாரதியாரால் தமிழில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ உணர்ச்சி பொங்கக் கவிதை படிக்கும் இடங்களில் யாப்பு தடையாக இருப்பதை உணர்ந்த பாரதியார் வசன கவிதை வடிவத்தைக் கையாண்டார்.
- ❖ இந்த வசன கவிதையே புதுக்கவிதை என்ற வடிவம் உருவாகக் காரணமாயிற்று.